ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பெரிய திருவந்தாதி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to **Smt. Vasundara Ramarajan** for proofreading the entire document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பெரிய திருவந்தாதி ॥

*அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்த தனியன்*

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்துரைத்து⋆
வந்தித்து வாயார வாழ்த்தியே⋆ - சந்த
முருகூரும் சோலைசூழ் மொய் பூம் பொருநல்⋆
குருகூரன் மாறன் பேர் கூறு

‡முயற்றி சுமந்தெழுந்து⋆ முந்துற்ற நெஞ்சே⋆
இயற்றுவாய் எம்மொடு நீ கூடி⋆ நயப்புடைய
நாவீன் தொடைக் கிளவி⋆ உள் பொதிவோம்⋆ நற் பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ் (1)

புகழ்வோம் பழிப்போம்⋆ புகழோம் பழியோம்⋆
இகழ்வோம் மதிப்போம்⋆ மதியோம் இகழோம்⋆ மற்-
றெங்கள் மால்! செங்கண் மால்!⋆ சீறல் நீ தீவினையோம்⋆
எங்கள் மால் கண்டாய் இவை (2)

இவையன்றே நல்ல⋆ இவையன்றே தீய⋆
இவை என்றிவை அறிவனேலும்⋆ இவை எல்லாம்
என்னால் அடைப்பு நீக்கொண்ணாது⋆ இறையவனே⋆
என்னால் செயற் பாலதென் (3)

என்னின் மிகு புகழார் யாவரே⋆ பின்னையும் மற்று
எண்ணில்⋆ மிகு புகழேன் யான் அல்லால்⋆ என்ன
கருஞ்சோதிக்⋆ கண்ணன் கடல் புரையும்⋆ சீலப்
பெருஞ்சோதிக்கென் நெஞ்சாள் பெற்று (4)

பெற்ற தாய் நீயே⋆ பிறப்பித்த தந்தை நீ⋆
மற்றையார் ஆவாரும் நீ பேசில்⋆ எற்றேயோ
மாய! மா மாயவளை⋆ மாய முலை வாய் வைத்த⋆
நீ அம்மா! காட்டும் நெறி (5)

www.prapatti.com

நெறி காட்டி நீக்குதியோ⋆ நின்பால் கரு மா⋆
முறி மேனி காட்டுதியோ⋆ மேல் நாள் அறியோமை
என் செய்வான் எண்ணினாய்⋆ கண்ணனே⋆ ஈதுரையாய்
என் செய்தால் என் படோம் யாம் (6)

யாமே அருவினையோம் சேயோம்⋆ என் நெஞ்சினார்
தாமே⋆ அணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார்⋆ பூ மேய
செம்மாதை⋆ நின் மார்வில் சேர்வித்து⋆ பார் இடந்த
அம்மா! நின் பாதத்தருகு (7)

அருகும் சுவடும் தெரிவுணரோம்⋆ அன்பே
பெருகும் மிக⋆ இதுவென் பேசீர்⋆ பருகலாம்
பண் புடையீர்! பார் அளந்தீர்!⋆ பாவியேம் கண் காண்பரிய⋆
நுண் புடையீர் நும்மை நுமக்கு (8)

நுமக்கடியோம் என்றென்று⋆ நொந்துரைத்தென்⋆ மாலார்
தமக்கவர் தாம்⋆ சார்வரியர் ஆனால்⋆ எமக்கினி
யாதானும்⋆ ஆகிடு காண் நெஞ்சே⋆ அவர் திறத்தே
யாதானும் சிந்தித்திரு (9)

இரு நால்வர்⋆ ஈரைந்தின் மேல் ஒருவர்⋆ எட்டோ-
டொரு நால்வர்⋆ ஓர் இருவர் அல்லால்⋆ திருமாற்கு
யாம் ஆர் வணக்கம் ஆர்⋆ ஏ பாவம் நல் நெஞ்சே⋆
நாமா மிக உடையோம் நாழ் (10)

நாழால் அமர் முயன்ற⋆ வல் அரக்கன் இன் உயிரை⋆
வாழாவகை வலிதல் நின் வலியே⋆ ஆழாத
பாரும் நீ வானும் நீ⋆ காலும் நீ தீயும் நீ⋆
நீரும் நீ ஆய் நின்ற நீ (11)

நீ அன்றே ஆழ் துயரில்⋆ வீழ்விப்பான் நின்றுழன்றாய்⋆
போய் ஒன்று சொல்லி என் போ நெஞ்சே⋆ நீ என்றும்
காழ்த்துபதேசம் தரினும்⋆ கைக்கொள்ளாய்⋆ கண்ணன் தாள்
வாழ்த்துவதே கண்டாய் வழக்கு (12)

வழக்கொடு மாறுகொள் அன்று⋆ அடியார் வேண்ட⋆
இழக்கவும் காண்டும் இறைவ! இழப்புண்டே⋆
எம் ஆட்கொண்டாகிலும்⋆ யான் வேண்ட என் கண்கள்⋆
தம்மால் காட்டுன் மேனிச் சாய் (13)

சாயால் கரியானை⋆ உள் அறியாராய் நெஞ்சே⋆
பேயார் முலைகொடுத்தார் பேயர் ஆய்⋆ நீ யார் போய்த்
தேம் பூண் சுவைத்து⋆ ஊன் அறிந்தறிந்தும்⋆ தீவினையாம்
பாம்பார் வாய்க் கை நீட்டல் பார்த்து (14)

பார்த்தோர் எதிரிதா நெஞ்சே⋆ படு துயரம்
பேர்த்தோதப்⋆ பீடழிவாம் பேச்சில்லை⋆ ஆர்த்தோதம்
தம் மேனி தாள் தடவத்⋆ தாம் கிடந்து⋆ தம்முடைய
செம்மேனிக் கண்வளர்வார் சீர் (15)

சீரால் பிறந்து⋆ சிறப்பால் வளராது⋆
பேர் வாமன் ஆகாக்கால் பேராளா⋆ மார்பாரப்
புல்கி நீ உண்டுமிழ்ந்த⋆ பூமி நீர் ஏற்பரிதே⋆
சொல்லு நீ யாம் அறியச் சூழ்ந்து (16)

சூழ்ந்தடியார் வேண்டினக்கால்⋆ தோன்றாது விட்டாலும்⋆
வாழ்ந்திடுவர் பின்னும் தம் வாய் திறவார்⋆ சூழ்ந்தெங்கும்
வாள் வரைகள் போல் அரக்கன்⋆ வன் தலைகள் தாம் இடிய⋆
தாள் வரை வில் ஏந்தினார் தாம் (17)

தாம்பால் ஆப்புண்டாலும்⋆ அத்தழும்பு தான் இளகப்⋆
பாம்பால் ஆப்புண்டு பாடுற்றாலும்⋆ சோம்பாதிப்-
பல் உருவை எல்லாம்⋆ படர்வித்த வித்தா⋆ உன்
தொல்லுருவை யார் அறிவார் சொல்லு (18)

சொல்லில் குறை இல்லை⋆ சூதறியா நெஞ்சமே⋆
எல்லி பகல் என்னாதெப்போதும்⋆ தொல்லைக் கண்
மாத் தானைக்கெல்லாம்⋆ ஓர் ஐவரையே மாறாக⋆
காத்தானைக் காண்டும் நீ காண் (19)

www.prapatti.com

காணப் புகில் அறிவு⋆ கைக் கொண்ட நல் நெஞ்சம்⋆
நாணப் படும் அன்றே நாம் பேசில்⋆ மாணி
உருவாகிக் கொண்டு⋆ உலகம் நீர் ஏற்ற சீரான்⋆
திருவாகம் தீண்டிற்றுச் சென்று (20)

சென்றங்கு வெந்நரகில்⋆ சேராமல் காப்பதற்கு⋆
இன்றிங்கென் நெஞ்சால் இடுக்குண்ட⋆ அன்றங்குப்
பார் உருவும் பார் வளைத்த நீர் உருவும்⋆ கண் புதையக்⋆
கார் உருவன் தான் நிமிர்த்த கால் (21)

காலே பொதத் திரிந்து⋆ கத்துவராம் இனநாள்⋆
மாலார் குடிபுகுந்தார் என் மனத்தே⋆ மேலால்
தருக்கும் இடம் பாட்டினோடும்⋆ வல்வினையார் தாம்⋆ வீற்-
றிருக்கும் இடம் காணாதிளைத்து (22)

இளைப்பாய் இளையாப்பாய்⋆ நெஞ்சமே! சொன்னேன்⋆
இளைக்க நமன் தமர்கள் பற்றி இளைப்பெய்த⋆
நாய் தந்து மோதாமல்⋆ நல்குவான் நல் காப்பான்⋆
தாய் தந்தை எவ் உயிர்க்கும் தான் (23)

தானே தனித் தோன்றல்⋆ தன் அளப்பொன்றில்லாதான்⋆
தானே பிறர்கட்கும் தற்றோன்றல்⋆ தானே
இளைக்கில் பார் கீழ் மேலாம்⋆ மீண்டமைப்பான் ஆனால்⋆
அளக்கிற்பார் பாரின் மேல் ஆர் (24)

ஆரானும்⋆ ஆதானும் செய்ய⋆ அகலிடத்தை
ஆராய்ந்து⋆ அது திருத்தல் ஆவதே⋆ சீர் ஆர்
மனத்தலை⋆ வன் துன்பத்தை மாற்றினேன்⋆ வானோர்
இனத் தலைவன் கண்ணனால் யான் (25)

யானும் என் நெஞ்சும் இசைந் தொழிந்தோம்⋆ வல்வினையைக்
கானும் மலையும் புகக் கடிவான்⋆ தான் ஓர்
இருள் அன்ன மா மேனி⋆ எம் இறையார் தந்த⋆
அருள் என்னும் தண்டால் அடித்து (26)

அடியால் படி கடந்த முத்தோ⋆ அதன்றேல்
முடியால்⋆ விசும்பளந்த முத்தோ⋆ நெடியாய்!
செறி கழல்கள் தாள் நிமிர்த்துச்⋆ சென்றுலகம் எல்லாம்⋆
அறிகிலமால் நீ அளந்த அன்று (27)

அன்றே நம் கண் காணும்⋆ ஆழியான் கார் உருவம்⋆
இன்றே நாம் காணாதிருப்பதுவும்⋆ என்றேனும்
கட்கண்ணால்⋆ காணாத அவ்வுருவை⋆ நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணும் உணர்ந்து (28)

உணர ஒருவர்க்கு⋆ எளியனே செவ்வே⋆
இணரும் துழாய் அலங்கல் எந்தை⋆ உணரத்
தனக்கெளியர் எவ்வளவர்⋆ அவ்வளவன் ஆனால்⋆
எனக்கெளியன் எம் பெருமான் இங்கு (29)

இங்கில்லை⋆ பண்டு போல் வீற்றிருத்தல்⋆ என்னுடைய
செங்கண் மால்⋆ சீர்க்கும் சிறிதுள்ளம்⋆ அங்கே
மடி அடக்கி நிற்பதனில்⋆ வல்வினையார் தாம்⋆ மீண்டு
அடி எடுப்பதன்றோ அழகு (30)

அழகும் அறிவோமாய்⋆ வல்வினையும் தீர்ப்பான்⋆
நிழலும் அடி தாறும் ஆனோம்⋆ சுழலக்
குடங்கள்⋆ தலை மீதெடுத்துக் கொண்டாடி⋆ அன்றத்
தடங்கடலை மேயார் தமக்கு (31)

தமக்கடிமை வேண்டுவார்⋆ தாமோதரனார்
தமக்கு⋆ அடிமை செய் என்றால் செய்யாது⋆ எமக்கென்றும்
தாம் செய்யும் தீவினைக்கே⋆ தாழ்வுறுவர் நெஞ்சினார்⋆
யாம் செய்வதிவ் விடத்திங்கியாது (32)

யாதானும் ஒன்றறியில்⋆ தன் உகக்கில் என் கொலோ⋆
யாதானும் நேர்ந்தணுகா ஆறு தான்⋆ யாதானும்
தேறுமா செய்யா⋆ அசுரர்களை⋆ நேமியால்
பாறு பாறாக்கினான் பால் (33)

www.prapatti.com

பால் ஆழி⋆ நீ கிடக்கும் பண்பை⋆ யாம் கேட்டேயும்
    கால் ஆழும்⋆ நெஞ்சழியும் கண் சுழலும்⋆ நீல் ஆழிச்
சோதியாய்! ஆதியாய்!⋆ தொல்வினை எம்பால் கடியும்⋆
    நீதியாய்! நிற் சார்ந்து நின்று (34)

நின்றும் இருந்தும்⋆ கிடந்தும் திரிதந்தும்⋆
    ஒன்றுமோ ஆற்றான் என் நெஞ்சகலான்⋆ அன்றங்கை
வன் புடையால் பொன் பெயரோன்⋆ வாய் தகர்த்து மார் விடந்தான்⋆
    அன்புடையன் அன்றே அவன் (35)

அவனாம் இவனாம் உவனாம்⋆ மற்றும்பர்
    அவனாம்⋆ அவன் என்றிராதே⋆ அவனாம்
அவனே எனத் தெளிந்து⋆ கண்ணனுக்கே தீர்ந்தால்⋆
    அவனே எவனேலும் ஆம் (36)

ஆமாறறிவுடையராவது⋆ அரிதன்றே⋆
    நாமே அதுவுடையோம் நன் நெஞ்சே⋆ பூ மேய்
மதுகரமே⋆ தண் துழாய் மாலாரை⋆ வாழ்த்தாம்
    அது கரமே அன்பால் அமை (37)

அமைக்கும் பொழுதுண்டே⋆ ஆராயில் நெஞ்சே⋆
    இமைக்கும் பொழுதும் இடைச்சி குமைத்திறங்கள்⋆
ஏசியே ஆயினும்⋆ ஈன் துழாய் மாயனையே⋆
    பேசியே போக்காய் பிழை (38)

பிழைக்க முயன்றோமோ⋆ நெஞ்சமே! பேசாய்⋆
    தழைக்கும் துழாய் மார்வன் தன்னை⋆ அழைத்தொருகால்
போயுபகாரம்⋆ பொலியக் கொள்ளாது⋆ அவன் புகழே
    வாயுபகாரம் கொண்ட வாய்ப்பு (39)

வாய்ப்போ இதுவொப்ப⋆ மற்றில்லை வா நெஞ்சே⋆
    போய்ப் போ ஓய் வெந்நரகில் பூவியேல்⋆ தீப் பால
பேய்த் தாய்⋆ உயிர் களாய்ப் பால் உண்டு⋆ அவள் உயிரை
    மாய்த்தானை வாழ்த்தே வலி (40)



www.prapatti.com

வலியம் என நினைந்து⋆ வந்தெதிர்ந்த மல்லர்⋆
    வலிய முடி இடிய வாங்கி⋆ வலிய நின்
பொன் ஆழிக் கையால்⋆ புடைத்திடுதி கீளாதே⋆
    பல் நாளும் நிற்கும் இப்பார் (41)

பார் உண்டான் பார் உமிழ்ந்தான்⋆ பார் இடந்தான் பார் அளந்தான்⋆
    பார் இடம் முன் படைத்தான் என்பரால்⋆ பார் இடம்
ஆவானும்⋆ தான் ஆனால் ஆர் இடமே⋆ மற்றொருவர்க்-
    காவான் புகாவால் அவை (42)

அவயம் என நினைந்து⋆ வந்த சுரர் பாலே⋆
    நவையை நளிர்விப்பான் தன்னை⋆ கவையில்
மனத்துயர வைத்திருந்து⋆ வாழ்த்தாதார்க்குண்டோ⋆
    மனத் துயரை மாய்க்கும் வகை (43)

வகை சேர்ந்த நல் நெஞ்சும்⋆ நா உடைய வாயும்⋆
    மிக வாய்ந்து வீழா எனிலும்⋆ மிகவாய்ந்து
மாலைத் தாம்⋆ வாழ்த்தாதிருப்பர் இதுவன்றே⋆
    மேலைத்தாம் செய்யும் வினை (44)

வினையார் தர முயலும்⋆ வெம்மையை அஞ்சி⋆
    தினையாம் சிறிதளவும் செல்ல நினையாது⋆
வாசகத்தால் ஏத்தினேன்⋆ வானோர் தொழுதிறைஞ்சும்⋆
    நாயகத்தான் பொன் அடிக்கள் நான் (45)

நான் கூறும் கூற்றாவது⋆ இத்தனையே⋆ நாள் நாளும்
    தேங்கோத நீர் உருவன்⋆ செங்கண் மால்⋆ நீங்காத
மா கதியாம்⋆ வெந்நரகில் சேராமல் காப்பதற்கு⋆
    நீ கதியா நெஞ்சே! நினை (46)

நினைத்திறைஞ்சி மானிடவர்⋆ ஒன்றிரப்பர் என்றே⋆
    நினைத்திடவும் வேண்டா நீ நேரே⋆ நினைத்திறைஞ்ச
எவ்வளவர் எவ்விடத்தோர் மாலே⋆ அது தானும்⋆
    எவ்வளவும் உண்டோ எமக்கு (47)

www.prapatti.com

எமக்கு யாம் விண் நாட்டுக்கு⋆ உச்சமதாம் வீட்டை⋆
அமைத்திருந்தோம் அஃதன்றே யாமாறு⋆ அமைப் பொலிந்த
மென் தோளி காரணமா⋆ வெம் கோட்டேறேழ் உடனே⋆
கொன்றானையே மனத்துக் கொண்டு (48)

கொண்டல் தான் மால் வரை தான்⋆ மா கடல் தான் கூர் இருள் தான்⋆
வண்டறாப் பூவை தான் மற்றுத்தான்⋆ கண்ட நாள்
கார் உருவம் காண்தோறும்⋆ நெஞ்சோடும்⋆ கண்ணனார்
பேர் உருவென்றெம்மைப் பிரிந்து (49)

பிரிந்தொன்று நோக்காது⋆ தம்முடைய பின்னே⋆
திரிந்துழலும் சிந்தனையார் தம்மை⋆ புரிந்தொருகால்
ஆவா! என இரங்கார்⋆ அந்தோ! வலிதேகொல்⋆
மா வாய் பிளந்தார் மனம் (50)

மனம் ஆளும் ஓரைவர்⋆ வன் குறும்பர் தம்மை⋆
சின மாள்வித்தோர் இடத்தே சேர்த்து⋆ புனம் ஏய
தண் துழாயான் அடியைத்⋆ தாம் காணும் அஃதன்றே⋆
வண் துழாம் சீரார்க்கு மாண்பு (51)

மாண் பாவித்தந்நான்று⋆ மண் இரந்தான்⋆ மாயவள் நஞ்-
சூண் பாவித்துண்டான்⋆ அதோருருவம்⋆ காண்பான் நம்
கண்ணவா⋆ மற்றொன்று காண் உறா⋆ சீர் பரவா-
துண்ண வாய் தான் உறுமோ ஒன்று (52)

ஒன்றுண்டு செங்கண் மால்!⋆ யான் உரைப்பது⋆ உன் அடியார்க்-
கென் செய்வன் என்றே இருத்தி நீ⋆ நின் புகழில்
வைகும்⋆ தம் சிந்தையிலும் மற்றினிதோ⋆ நீ அவர்க்கு
வைகுந்தம் என்றருளும் வான் (53)

வானோ மறி கடலோ⋆ மாருதமோ தீயகமோ⋆
கானோ ஒருங்கிற்றும் கண்டில மால்⋆ ஆன் ஈன்ற
கன்றுயரத் தாம் எறிந்து⋆ காய் உதிர்த்தார் தாள் பணிந்தோம்⋆
வன் துயரை ஆவா! மருங்கு (54)

மருங்கோதம் மோதும்⋆ மணி நாகணையார்⋆
மருங்கே வர அரியரேலும்⋆ ஒருங்கே
எமக்கவரைக் காணலாம்⋆ எப்பொழுதும் உள்ளால்⋆
மனக் கவலை தீர்ப்பார் வரவு (55)

வரவாறொன்றில்லையால்⋆ வாழ்வினிதால்⋆ எல்லே!
ஒருவாறு⋆ ஒருவன் புகாவாறு⋆ உரு மாறும்
ஆயவர் தாம் சேயவர் தாம்⋆ அன்றுலகம் தாயவர் தாம்⋆
மாயவர் தாம் காட்டும் வழி (56)

வழித் தங்கு வல்வினையை⋆ மாற்றானோ நெஞ்சே⋆
தழீ இக்கொண்டு போர் அவுணன் தன்னை⋆ சுழித்தெங்கும்
தாழ்விடங்கள் பற்றிப்⋆ புலால் வெள்ளம் தான் உகள⋆
வாழ்வடங்க மார்விடந்த மால் (57)

மாலே! படிச் சோதி மாற்றேல்⋆ இனி உனது
பாலே போல் சீரில்⋆ பழுத்தொழிந்தேன்⋆ மேலால்
பிறப்பின்மை பெற்று⋆ அடிக்கீழ்க் குற்றேவல் அன்று⋆
மறப்பின்மை யான் வேண்டும் மாடு (58)

மாடே வரப்பெறுவராம் என்றே⋆ வல்வினையார்
காடானும் ஆதானும்⋆ கை கொள்ளார்⋆ ஊடே போய்ப்
பேர் ஓதம் சிந்து⋆ திரைக் கண்வளரும்⋆ பேராளன்
பேர் ஓதச் சிந்திக்கப் பேர்ந்து (59)

பேர்ந்தொன்று நோக்காது⋆ பின் நிற்பாய் நில்லாப்பாய்⋆
ஈந் துழாய் மாயனையே என் நெஞ்சே⋆ பேர்ந்தெங்கும்
தொல்லை மா வெந்நரகில்⋆ சேராமல் காப்பதற்கு⋆
இல்லை காண் மற்றோர் இறை (60)

இறை முறையான் சேவடிமேல்⋆ மண் அளந்த அந்நாள்⋆
மறை முறையால் வானாடர் கூடி⋆ முறை முறையின்
தாதிலகு⋆ பூத்தெளித்தால் ஒவ்வாதே⋆ தாழ் விசும்பின்
மீதிலகித் தான் கிடக்கும் மீன் (61)

www.prapatti.com

மீன் என்னும் கம்பில்⋆ வெறி என்னும் வெள்ளி வேய்⋆
வான் என்னும் கேடிலா வான் குடைக்கு⋆ தான் ஓர்
மணிக் காம்பு போல்⋆ நிமிர்ந்து மண் அளந்தான்⋆ நங்கள்
பிணிக்காம் பெரு மருந்து பின் (62)

பின் துரக்கும் காற்றிழிந்த⋆ சூல் கொண்டல் பேர்ந்தும் போய்⋆
வன் திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே⋆ அன்று
திருச் செய்ய நேமியான்⋆ தீ அரக்கி மூக்கும்⋆
பருச் செவியும் ஈர்ந்த பரன் (63)

பரனாம் அவனாதல்⋆ பாவிப்பர் ஆகில்⋆
உரனால் ஒரு மூன்று போதும்⋆ மரம் ஏழ் அன்று
எய்தானைப்⋆ புள்ளின் வாய் கீண்டானையே⋆ அமரர்
கைதான் தொழாவே கலந்து (64)

கலந்து நலியும்⋆ கடுந் துயரை நெஞ்சே⋆
மலங்க அடித்து மடிப்பான்⋆ விலங்கல் போல்
தொல் மாலைக் கேசவனை⋆ நாரணனை மாதவனை⋆
சொல் மாலை எப்பொழுதும் சூட்டு (65)

சூட்டாய நேமியான்⋆ தொல் அரக்கன் இன் உயிரை⋆
மாட்டே துயர் இழைத்த மாயவனை⋆ ஈட்ட
வெறி கொண்ட⋆ தண் துழாய் வேதியனை⋆ நெஞ்சே!
அறி கண்டாய் சொன்னேன் அது (66)

அதுவோ நன்றென்று⋆ அங்கமர் உலகோ வேண்டில்⋆
அதுவோ பொருள் இல்லை அன்றே⋆ அதுவொழிந்து
மண் நின்று ஆள்வேன் எனிலும்⋆ கூடும் மட நெஞ்சே⋆
கண்ணன் தாள் வாழ்த்துவதே கல் (67)

கல்லும் கனை கடலும்⋆ வைகுந்த வானாடும்⋆
புல் என்றொழிந்தனகொல் ஏ பாவம்⋆ வெல்ல
நெடியான் நிறம் கரியான்⋆ உள் புகுந்து நீங்கான்⋆
அடியேனதுள்ளத்தகம் (68)



www.prapatti.com

அகம் சிவந்த கண்ணினராய்⋆ வல்வினையர் ஆவார்⋆
முகம் சிதைவராம் அன்றே முக்கி⋆ மிகும் திருமால்
சீர்க் கடலை உள் பொதிந்த⋆ சிந்தனையேன் தன்னை⋆
ஆர்க்கடல் ஆம் செவ்வே அடர்த்து (69)

அடர் பொன் முடியானை⋆ ஆயிரம் பேரானை⋆
சுடர் கொள் சுடர் ஆழியானை⋆ இடர் கடியும்
மாதா பிதுவாக⋆ வைத்தேன் எனதுள்ளே⋆
யாதாகில் யாதே இனி (70)

இனி நின்று நின் பெருமை⋆ யான் உரைப்பதென்னே⋆
தனி நின்ற சார்விலா மூர்த்தி⋆ பனி நீர்
அகத்துலவு⋆ செஞ்சடையான் ஆகத்தான்⋆ நான்கு
முகத்தான் நின் உந்தி முதல் (71)

முதலாம் திருவுருவம்⋆ மூன்றென்பர்⋆ ஒன்றே
முதல் ஆகும்⋆ மூன்றுக்கும் என்பர்⋆ முதல்வா
நிகர் இலகு கார் உருவா!⋆ நின் அகத்ததன்றே⋆
புகர் இலகு தாமரையின் பூ (72)

பூவையும் காயாவும்⋆ நீலமும் பூக்கின்ற⋆
காவி மலர் என்றும் காண்தோறும்⋆ பாவியேன்
மெல் ஆவி⋆ மெய் மிகவே பூரிக்கும்⋆ அவ்வவை
எல்லாம் பிரான் உருவே என்று (73)

என்றும் ஒருநாள்⋆ ஒழியாமை யான் இரந்தால்⋆
ஒன்றும் இரங்கார் உருக் காட்டார்⋆ குன்று
குடை ஆக⋆ ஆ காத்த கோவலனார்⋆ நெஞ்சே!
புடை தான் பெரிதே புவி (74)

புவியும் இரு விசும்பும்⋆ நின் அகத்த⋆ நீ என்
செவியின் வழி புகுந்து⋆ என் உள்ளாய்⋆ அவிவின்றி
யான் பெரியன் நீ பெரியை⋆ என்பதனை யார் அறிவார்⋆
ஊன் பருகு நேமியாய்! உள்ளு (75)

www.prapatti.com

உள்ளிலும் உள்ளம் தடிக்கும்⋆ வினைப் படலம்⋆
விள்ள விழித்துன்னை மெய் உற்றால்⋆ உள்ள
உலகளவு⋆ யானும் உளன் ஆவன் என்கொலோ⋆
உலகளந்த மூர்த்தி! உரை (76)

உரைக்கில் ஓர் சுற்றத்தார்⋆ உற்றார் என்றாரே⋆
இரைக்கும் கடல் கிடந்த எந்தாய்⋆ உரைப்பெல்லாம்
நின் அன்றி⋆ மற்றிலேன் கண்டாய்⋆ எனதுயிர்க்கோர்
சொல் நன்றி ஆகும் துணை (77)

துணை நாள் பெருங்கிளையும்⋆ தொல் குலமும்⋆ சுற்றத்-
திணை நாளும்⋆ இன்புடைத்தா மேலும்⋆ கணை நாணில்
ஓவாத் தொழிற் சார்ங்கன்⋆ தொல் சீரை நல் நெஞ்சே⋆
ஓவாத ஊணாக உண் (78)

உள் நாட்டுத் தேசன்றே!⋆ ஊழ்வினையை அஞ்சுமே⋆
விண் நாட்டை ஒன்றாக மெச்சுமே⋆ மண் நாட்டில்
ஆர் ஆகி⋆ எவ்விழிவிற்றானாலும்⋆ ஆழியங்கைப்
பேராயற்காள் ஆம் பிறப்பு (79)

பிறப்பிறப்பு மூப்புப்⋆ பிணி துறந்து⋆ பின்னும்
இறக்கவும்⋆ இன்புடைத்தா மேலும்⋆ மறப்பெல்லாம்
ஏதமே⋆ என்றல்லால் எண்ணுவனே⋆ மண் அளந்தான்
பாதமே ஏத்தாப் பகல் (80)

பகல் இரா என்பதுவும்⋆ பாவியாது⋆ எம்மை
இகல் செய்து⋆ இரு பொழுதும் ஆள்வர்⋆ தகவாத்
தொழும்பர் இவர் சீர்க்கும்⋆ துணையிலர் என்றோரார்⋆
செழும் பரவை மேயார் தெரிந்து (81)

தெரிந்துணர்வொன்றின்மையால்⋆ தீவினையேன்⋆ வாளா
இருந்தொழிந்தேன்⋆ கீழ் நாள்கள் எல்லாம்⋆ கரந்துருவின்
அம் மானை⋆ அந்நான்று பின் தொடர்ந்த⋆ ஆழி அங்கை
அம்மானை ஏத்தாதயர்த்து (82)



www.prapatti.com

அயர்ப்பாய் அயராப்பாய்⋆ நெஞ்சமே! சொன்னேன்⋆
உயப்போம் நெறி இதுவே கண்டாய்⋆ செயற்பால
அல்லவே செய்கிறுதி⋆ நெஞ்சமே! அஞ்சினேன்⋆
மல்லர் நாள் வவ்வினனை வாழ்த்து (83)

வாழ்த்தி அவன் அடியைப்⋆ பூப் புனைந்து⋆ நின் தலையைத்
தாழ்த்து⋆ இரு கை கூப்பென்றால் கூப்பாது பாழ்த்த விதி⋆
எங்குற்றாய் என்றவனை⋆ ஏத்தாதென் நெஞ்சமே⋆
தங்கத்தான் ஆமேலும் தங்கு (84)

தங்கா முயற்றிய ஆய்த்⋆ தாழ் விசும்பின் மீது பாய்ந்து⋆
எங்கே புக்கெத் தவம் செய்திட்டன கொல்⋆ பொங்கோதத்
தண்ணம் பால் வேலைவாய்க்⋆ கண்வளரும்⋆ என்னுடைய
கண்ணன் பால் நல் நிறம் கொள் கார் (85)

‡கார் கலந்த மேனியான்⋆ கை கலந்த ஆழியான்⋆
பார் கலந்த வல் வயிற்றான் பாம்பணையான்⋆ சீர் கலந்த
சொல் நினைந்து போக்காரேல்⋆ சூழ் வினையின் ஆழ் துயரை⋆
என் நினைந்து போக்குவர் இப்போது (86)

‡இப்போதும் இன்னும்⋆ இனிச் சிறிது நின்றாலும்⋆
எப்போதும் ஈதே சொல் என் நெஞ்சே⋆ எப்போதும்
கை கழலா நேமியான்⋆ நம்மேல் வினை கடிவான்⋆
மொய் கழலே ஏத்த முயல் (87)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com